சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– – செல்வி க.தங்கலெட்சுமி, த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு ஆர்.கணபதி– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.93

நாள் : 07.12.2020
சார்வரி, கார்த்திகை 22.
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
3. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கடிதம் எண். செ.மு.ஆ.எண். பி1/1737/ 2020, நாள் 10.06.2020.

---

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறையைச் சார்ந்த நிலநீர் கோட்டம், நீர்வள ஆதாரத்துறை, திண்டுக்கல் அலுவலகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்த திரு ஆர்.கணபதி கடந்த 16.02.2011 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர்/ மனைவி திருமதி G.லதா தமது மகளான செல்வி க.தங்கலெட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கேட்டுக் கொண்டதன் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் செல்வி க.தங்கலெட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் கண்காணிப்புப் பொறியாளர், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், மதுரையைச் சார்ந்த மின் உபகோட்டம், தேனி அலுவலகத்தில் 29.08.2018 முற்பகல் முதல் பணிமேற்கொண்டு வருகிறார் என்றும், பத்தாம் வகுப்பு தேர்வில் மார்ச் 2011–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் பிறந்த தேதி 11.11.1995 என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 29.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, மதுரை மண்டலம் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

(த.பி.பா.)